RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21317

# ஆணின் பின்னால் பெண்ணின் இருப்பு ‘யசோதரை’ நாவலை முன்வைத்து

மீ. சுதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய, நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்-624302, தமிழ்நாடு, இந்தியா

# Presenting the novel 'Yasodarai', the existence of woman behind man

M. Sudha [a, *]

[a] Department of Tamil, Gandhigram Rural Deemed to be University, Gandhigram-624302, Tamil Nadu, India

* Corresponding Author: sudhavenkatesh15@gmail.com

Received: 05-03-2021
Revised: 29-06-2021
Accepted: 16-07-2021
Published: 26-07-2021

Check for updates

## ABSTRACT

There are many changes in the modern world, but there is no equal right to see something that remains unchanged even after the emergence of various literary forms from the Sangam period to today. yasodha emphasized that the seeker woman can transform the ordinary man into an ideal before the world, without reaching into the small circle of the house where the Creator takes the way of yasodha to speak out for her own recognition and the welfare of the innate yasodha.

**Keywords:** Sangam period, Yasodha, Emergence, Woman

## முன்னுரை

தேடலின் நீட்சியே இலக்கியத்தின் உயிராக உள்ளது. சமத்துவமேமனித இனத்தின் பெரும் தேடலாக உள்ளது. ஆனால் ஆணால் கட்டமைக்கப்பட்ட இவ்வுலகம் பெண்ணின் இருப்பை மறுத்தும் மறைத்தும் வந்துள்ளது. மறுதலிக்கப்பட்ட மண்ணுலகம் தனக்கான இடத்தை தேடி அலைவதை இன்றைய படைப்புலகம் சித்திரிக்கிறது. நாகலட்சுமி சண்முகம் மொழிபெயர்த்த யசோதரை நாவல் பெண்ணின் தேடலை மையமாக வைத்து படைக்கப்பட்டுள்ளது. ஆணின் வெற்றியின் பின்னால் மறைக்கப்பட்ட பெண்ணின் இருப்பை கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## யசோதரை -கதைச் சுருக்கம்

தெலுங்கு மொழியில் வோல்காவால் எழுதப்பட்ட யசோதரை நாவலை தமிழில் நாகலட்சுமி சண்முகம் மொழி பெயர்த்துள்ளார். சித்தார்த்த கௌதமன் மெய்ஞானம் தேடி தனது இள வயது மனைவி யசோதரையையும் குழந்தை ராகுலனையும் விட்டுப் பிரிகிறார். இறுதியில் புத்தராக மாறிய கதை அனைவரும் அறிந்ததே. யசோதரை நாவலோ வரலாற்றின் ஊடாக உள்ள இடைவெளியை உற்று நோக்கி கௌதமனின் மனைவியான யசோதரைக்கு புதிய வடிவத்தை கொடுக்கிறது. கோலியா கிராமத்தில் உள்ள ஜமீன்தார் பிம்பானருக்கும் வசிஷ்டைக்கும் மகளாகப் பிறக்கிறாள் யசோதரை. தந்தை நடத்தும் வேள்வி குறித்தும் உயிர்களின் துன்பம் குறித்தும் கேள்விக் கேட்கிறாள். பெண்ணானவள் கேள்வி கேட்டதால் அவளுக்கு மனநிலை சரியில்லை என்று கருதுகிறார் பிம்பானனர். இதன் காரணமாக விரைவில் மகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் நினைக்கிறார். யசோதரை கௌதமனை மணமகனாகத் தேர்வுச் செய்கிறாள். பிம்பானனரோ மகளின் மனநிலை

பிறருக்குத் தெரிந்து விடும் முன்பு தனக்கு விருப்பம் இல்லாத கௌதமனுக்கு மகளை மணமுடித்து வைக்கிறார். கௌதமனை கண்ட நாள் முதல் காதல் கொண்டு தனது வாழ்க்கை துணையாக ஏற்றுக் கொள்கிறாள்யசோதரை. தனது ஞானத் தேடலுக்கு கௌதமனின் மெய்யறிவு தேடலுக்கும் இடையே இருக்கும் ஒற்றுமையை உணர்ந்து தனது மண உறவை முடிவு செய்கிறாள். திருமணத்திற்குப்பின் கௌதமனுக்கு ஞானத் தேடலுக்கான வழியைக் காட்டுகிறாள். இல்லறஉறவில் சிக்கி கௌதமன் வெளியே வரத் தயங்கும் இடத்தில் வாழ்வின் எதார்த்தத்தை எடுத்துக் கூறி வழி நடத்துபவளாகவும் உள்ளாள் யசோதரை. 'கௌதமன் புத்தனாக மாறிவிட்டான்' என்ற செய்தியை கேட்ட நொடி தனது வாழ்வின் லட்சியத்தை எட்டி விட்டதாக உளம்பூரிப்பதாககதை முடிகிறது. கௌதமனுடன் யசோதரை உரையாடும் ஒவ்வொரு கட்டத்திலும் பெண்ணின் மறைக்கப்பட்ட அறிவை, படைப்பாளர் எடுத்தியம்புகிறார்.

## கௌதமனிடம் தானே அறிமுகமாதல்:

திருமணம் குறித்த கனவுகள் இன்றி திரிந்த கௌதமனும்யசோதரையும் ஒருவரை ஒருவர் காணும் இடத்து இருவருக்கும் இடையில் ஈர்ப்பு ஏற்படுகின்றது. யசோதரையே தனது விருப்பத்தை கௌதமனிடம் முதலில் தெரிவிக்கிறாள். பிம்பானனரோவாள் சண்டையில் வெற்றி பெறுபவருக்கே தனது மகளை மணமுடித்து தருவேன் என்று கூறுகிறார். யசோதரையோ தான் பொருள் அல்ல என்றும் தனது விருப்பத்திற்கு மனம் கொள்வேன் என்றும் கூறுகிறாள்.

"ஒரு துணிச்சலான வீரன் ஒரு போட்டியில் வெற்றி கொள்ளப் போகின்ற ஒரு பொருளாக ஆக எனக்கு விருப்பமில்லை. சித்தார்த்தனை மணம் முடிக்க என் இதயப்பூர்வமான ஒப்புதலை கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்" என்று கூறுகிறாள் (Nagalatchumi Sanmugam, 2019). மேலும்,

"நீங்கள் இந்த உண்மையை உதாசீனப்படுத்தி விட்டு உங்களுடைய சத்திரியப் பாரம்பரியங்களை தூக்கிப் பிடித்தால் நான் இனி உங்கள் மகளாக இருக்க மாட்டேன்." (Nagalatchumi Sanmugam, 2019). ஆண் மேலாதிக்க உடையவனாகவும் பெண் தனக்கு தேவையானவற்றை எடுத்துக் கூற இயலாதவளாக இருக்க வேண்டும் என்ற ஆணின் மனப்பான்மையை எதிர்த்து கேள்விக் கேட்டு தனது விருப்பத்தை நிலைநாட்டும் புதுமைப்பெண்ணாக விளங்குகிறாள்.

"விலகி வீட்டில் ஒரு பொந்தில் வளர்வதை

வீரப் பெண்கள்விரைவில் ஒழிப்பாராம்

மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பாராம்

மூடக்கட்டுகள் யாவும் தகர்ப்பாராம்." (Bharathiar, 1987)

தன்னைப் பற்றியும் தனது உரிமையை பற்றியும் உணர்ந்து அதற்காக குரல் கொடுக்கக்கூடிய பெண்ணாக யசோதரை உள்ளதை இதன் வழிஅறிய முடிகின்றது.

## ஞானத்துடன் இருத்தல்

உலக விடயங்களில் கலந்து கொள்ளும் தகுதியற்றவள். ஆணின் தேவைக்காகப்படைக்கப்பட்ட உயிரியியாக மட்டுமே கருதி வந்த சமூகத்தில், தனக்கானத்தேடலுடன் வலம் வருகிறாள் யசோதரை. மேலும் உயிர்களின் துன்பத்தைத் தீர்க்க வேண்டும் பெண்ணும் சக உயிரியாக வைக்க வேண்டும் என்றும் நினைக்கிறாள்.

"ஆணும் பெண்ணும் நிகரான கொள்வதால்; அறிவிலோங்கியிவ்வையந்தழைக்கும்...

ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடி பெண்களின் குணங்களாம்" (Bharathiar, 1987). கௌதமனின் மெய்ஞானத் தேடலின் ஒவ்வொரு கட்டத்திலும் அவனுக்கு ஏற்படுகின்ற தடுமாற்றத்திற்குத் தீர்வு தருகிறாள். சமூகம் குறித்து கௌதமனுக்கு விளக்குமிடத்து ஆண்கள்,

பெண்களை சமூகத்தின் அங்கமாக் கருதாமல் சிற்றின்பத்திற்கும் மட்டும் உரியவளாகவும் பலவீனமானவள் ஆகவும் கருதுவதையும் இந்நிலை மாற பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தேவைப்படும் என்றும் எடுத்து கூறுகிறாள். பெண்ணின் சுதந்திரத்திற்கு அறிவுத் தேடலுக்கும் கௌதமன் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கிறாள்.

“இனியும் தாமதிக்காதீர்கள் நீங்கள் அறிவுப் பாதையை பின் தொடர்ந்து செல்லுவதிலிருந்து உங்களைத் தடுக்கின்ற பிணைப்புகளை உடைத்தெறியுங்கள். துன்புற்றுக் கொண்டிருக்கின்ற மனித குலத்திற்கு விமோசனம் வழங்கக்கூடிய வழியை கண்டுபிடிங்கள்.” (Nagalatchumi Sanmugam, 2019)

“காதல் ஒருவனை கைபிடித்தே அவன், காரியம் யாவிலும் கை கொடுத்து,

மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்,

மாட்சி பெறச்செய்து வாழ்வோமட” (Bharathiar, 1987)

என்ற பாரதியார் கூற்று நினைவு கூறத்தக்கது.

## மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்

சாதி வேறுபாடு இன்றி மக்களுக்கு கௌதமன் உதவுவதை அவனது இன மக்கள் எதிர்த்தனர். கௌதமனின் வீட்டிற்க்கே வந்து சண்டையிடத் தொடங்கினர். அவ்வேளையில் வீட்டிலிருந்த யசோதரை கௌதமனின் செயலுக்கு விளக்கம் கூறி மக்களை நல்வழிப் படுத்துகிறள். “சித்தார்த்தன் ஒரு புதிய பாதையை உருவாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார். நீங்கள் இப்போது நடந்து கொண்டிருக்கின்ற பாதை கூட முன்பு ஏதோ ஒரு காலகட்டத்தில் யாரோ ஒருவரால் புதிதாக உருவாக்கப்பட்டது தான் என்பதை மறக்காதீர்கள்” (Nagalatchumi Sanmugam, 2019) என்று கூறி அவனது செயலிலிருந்து உலகிற்கு கிடைக்க கூடிய நன்மையை எடுத்துக் கூறுகிறாள். கணவனின் செயலுக்கு பின்னால் இருக்கக்கூடிய நன்மையை தான் உணர்ந்தது மட்டுமல்லாமல் பிறருக்கு எடுத்துக் கூறி தனது ஆதரவையையும் தெரிவிக்கிறாள்.

## உயிர்ப்பலி மறுத்தல்

சத்திரியரான பினம்பானனர்தனது குடும்ப வளத்திற்காக அந்தணர் கூறியபடி கேள்விகளை நடத்தி வருகிறார். இதைத் தடுக்கவருகிறாள் யசோதரை. வேள்வி என்பது மாயை என்றும் கடவுளின் படைப்பில் யாரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் இல்லை என்றும் ஏழைகளின் சொத்துக்களை அபகரித்து செய்யப்படும் வேள்வியால் நன்மை பயக்காது என்றும் தந்தையிடம் கூறுகிறாள் யசோதரை. நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற நிலையை நீக்குவதற்கு மனிதர்களுக்குள் இருக்கின்ற வேற்றுமையேஎன்றும் அவை ஒழிய வேண்டும் என்று எடுத்தியப்புகிறாள்.

“சடங்கு என்ற பெயரில் கேள்விகளில் எரிக்கப்படும் தானியங்கள் அடிமைகளுக்கு தானமாக கொடுக்கப்பட்டால், அவர்கள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பர்”. (Nagalatchumi Sanmugam, 2019)

“அப்பா, இது பொது அறிவு சார்ந்த ஒரு விஷயம். சற்று கவனமாக சிந்தித்தால், நோய்களுக்கும் வேள்விகளுக்கும் இடையே எந்த உண்மையான தொடர்பும் இல்லை என்பதை எவர் உருவானாலும் பார்க்க முடியும்.” ஒரு வேள்வியை நடத்துவது புனிதமானது அல்ல அது அதற்கு நேர் எதிரானது அது ஒரு பாவம்.” (Nagalatchumi Sanmugam, 2019). தனக்கு கீழ் இருப்பவர்களின் உடைமைகளை பறித்து வேள்வி செய்வதால் எந்தவித பயனும் நாட்டிற்கும் மனிதருக்கும் நிகழாது என்பதை யசோதரை தந்தையிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறாள் இதன் அடிப்படையில் உயிர்ப்பலி என்பது கூடாது அது நன்மை பயக்காது என்பதை உணர்த்துகிறாள்.

## உரிமை வேண்டல்

"ஆணுக்கு பெண் இளைப்பிள்ளை காண் "(பாரதியார் கவிதைகள்பக்கம் 579) என்ற பாரதியின் வாக்குப்படி வாழ்பவளாக யசோதரை உள்ளாள். திருமணம் குறித்து முடிவெடுக்கும் உரிமை மணமகளுக்கும் அவளது தாயாருக்கும் உள்ளது என்பதை தனது தாயிடம் எடுத்துக் கூறுகிறாள்.

"அம்மா…திருமணத்தைப் பொறுத்தவரை எப்போதும் என் தந்தைக்கு தான் உச்சகட்ட அதிகாரம் இருந்ததாக முன்பு நீங்கள் கூறி வந்தீர்கள்…ஆண்கள் மீது நமக்கு அதிகாரம் இருக்கிறது. நம்மாலும் நம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும். நமக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்" (Nagalatchumi Sanmugam, 2019). பெண்களை வீட்டிற்குள்ளேயே முடக்கி போட்டு விடாமல் அவர்களை புறவெளியில் நடக்க விட்டால் தனக்கான பாதையை மட்டுமல்லாமல் சமூகத்திற்கான புதிய பாதையை உருவாக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு என்பதை யசோதரை வழி படைப்பாளர் உணர்த்துகிறார்.

"பெண்ணை ஒரு தனி மனுசியாக, அவள் ஆணைப் போன்றே எல்லா விதத்திலும் செயல்படக்கூடிய ஒரு உயிரியாக காண முடியவில்லை. அனேக மரபு வழி வந்த கருத்துக்களும், மறை அச்ச சூழ்நிலையும் ஆண்-பெண் வேறுபாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன" என்ற ஃபிரைடன் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது (Prema, 2000).

## மாற்றத்திற்கு அடிகோடிடல்

புதிய பாதையை நோக்கிப் பயணம் செய்யும் இடத்தில் பல தடைகளும் தடங்கல்களும் ஏற்படுவது இயல்பு. கௌதமனின் மனதில் குடும்பம் சார்ந்தும் உலகம் சார்ந்தும் ஏற்படும் சந்தேகங்களை தீர்த்து வைக்கிறாள் யசோதரை. யசோதரை கருவுற்றிருக்கும் செய்தி அறிந்த கௌதமன் குடும்ப பற்றினால் மனம் தடுமாற்றத்திற்கு ஆளாகிறான். தனது குடும்பத்தை விட்டு வெளியேறி ஞானத்தைத் தேடிப் பயணம் செய்ய அவனுக்கு மனவலுவூட்டுகிறாள் யசோதரை. "நீங்கள் உங்களுடைய அனைத்துப்பிணைப்புகளையும் அறுத்து எறிந்து விட்டு, இன்றிலிருந்து ஐந்தாம் நாள் அன்று இந்த வீட்டை விட்டு போகப் போகிறீர்கள். நீங்கள் இங்கிருந்து போனவுடன், யசோதரையை நீங்கள் உங்களுடைய நினைவில் இருந்து முற்றிலுமாக அழித்து விட வேண்டும் (Nagalatchumi Sanmugam, 2019). "மனித குலத்தின் முட்டிக்கான வலியை நீங்கள் கண்டுபிடித்து இருக்கும்போது, அந்தப் பாதையைப் பெண்களுக்கும் திறந்து விடுங்கள் அப்போதுதான் முக்தி அடைவது பெண்களுக்கும் சாத்தியமாகும்" என்று கூறுகிறாள் (Nagalatchumi Sanmugam, 2019).

"சமூகத்தில் தங்களுக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்…ஏற்கனவே இருக்கும் சமூக அமைப்பை முன்னேற்றி, தேவையான மாறுதல்களைச் செய்து, அதன் மூலம் பெண்களுக்குத் தேவையான அளவு விடுதலையும் மதிப்பையும் தகுதியையும் பெற்றுத்தர வேண்டும் "என்ற இரா. பிரேமா கருத்து இங்கு வலியுறுத்தப்படுகிறது (Prema, 2000). சித்தார்த்தன் ஞானம் பெற்று உலக மக்களால் புத்தர் என்று அழைக்கப்பட்டபோது யசோதரை தனது வாழ்வின் லட்சியம் நிறைவேறியதாக உணருகிறாள். தானும் பிக்குனியாக மாறி கிராம மக்களுக்கு உதவி செய்கிறாள். யசோதரை தான்சித்தார்த்தனுக்குப் பின்னால் இருந்த உண்மையான வலிமையா? அல்லது அவள் அவனிடமிருந்து வலிமை பெற்று அதை கொண்டு அவனுக்கு மேலும் வலுவூட்டிக் கொண்டிருந்தாளா? என்று பார்ப்பவர்களை சிந்திக்க வைக்கிறாள்.

## முடிவுரை

ஞானத் தேடலில் ஆண்களுக்கு சமமாக பெண்களும் பங்கு கொள்வதற்கு வழிகோல முனைகிறாள் யசோதரை. கௌதமன் புத்தன் ஆக மாறுவதற்கும் மனவலிமையுடன் ஆன்மீகத் தேடலை கண்டறிவதற்கும் யசோதரை பின்னிருந்து ஊக்கம் அளித்த விதத்தினை இதன் வழி

உய்த்துணர முடிகிறது. வரலாற்றில் பெண்களின் பங்கு மறைக்கப்பட்டிருந்தது அதனை கட்டுடைக்கும்முயற்சியில்நவீன போக்கில் இலக்கியங்களில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன அவற்றின் அடிப்படையில் இரண்டாம் தர குடிகள் ஆகவும் தனித்து இயங்க இயலாதவர்களாகவும் இருக்கும் பெண்களிடம் மன வலிமையும் உறுதியும் இருக்கும் என்ற மாற்றுப் பார்வையை யசோதரையின் நாவல் மூலம் படைப்பாளர் வெளிப்படுத்துகிறார்.

## References

Bharathiar, (1987) Bharathiar Kavithaigal, Manivasagar Pathippagam, Chennai, India

Nagalatchumi Sanmugam, (2019) Yashodharai, Manjul Publishing House, Bhopal, India

Prema, R. (2000) Penniyam, Tamil Puthakalayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License